தின கனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தின கனி
NAMADHU DHINA KANI www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 265 | 4 Pages | 23.4.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 265 | 4 பக்கங்கள் | 23.4.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**வானுயர் தோற்றம் எவன்செய்யுந் தன்நெஞ்சத்**
**தானறி குற்றப் படின்**

**விளக்கம்:**
**தன் மனம் தான் அறிந்த குற்றத்தில் தங்குமானால் வானத்தைப் போல் உயர்ந்துள்ள தவக்கோலம் ஒருவனுக்கு என்ன பயன் செய்யும்.**

# பாரதிதாசன் பிறந்தநாள்: தமிழ் வார விழா; சட்டசபையில் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஏப்.23

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை முன்னிட்டு, வரும் 29 முதல் மே 5ம் தேதி வரை 'தமிழ் வாரவிழா' கொண்டாடப்பட உள்ளது.

சட்டசபையின் 110 விதியின் கீழ் பாவேந்தர் பாரதிதாசனை போற்றும் வகையில் புதிய அறிவிப்புகளை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்

இதன்படி அனைத்து மாவட்டங்களிலும் கவியரங்கங்கள், கருத்தரங்கங்கள் நடைபெறும். பள்ளிகளில் பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படும். தமிழில் சிறந்து விளங்கும் இளம் கவிஞருக்கு 'பாரதிதாசன் இளம் படைப்பாளர்' விருது வழங்கப்பட உள்ளது.





இதனைத்தொடர்ந்து உரையாற்றிய முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், "எளிமையான சொற்கள் மூலம் வலிமையான கருத்துக்களை சொன்னவர் பாரதிதாசன் .

நமது மொழியின் பெருமைகளை எடுத்துரைக்க தமிழ் வார விழா ஒரு நல்வாய்ப்பாகும். செந்தமிழைப் பரப்ப, அறிவுச் செல்வத்தைக் காட்ட தமிழ் வார விழா வழிவகை செய்யும்" என்று கூறினார்.

## எடியூரப்பா வழக்கு அதிக நீதிபதிகள் அடங்கிய அமர்வுக்கு மாற்றம் சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு



பெங்களூரு, ஏப்.23

கர்நாடக பா.ஜனதா மூத்த தலைவரும், முன்னாள்முதல்மந்திரியுமானஎடியூரப்பா, கடந்த 2006ம் ஆண்டு துணை முதல்மந்திரியாக பணியாற்றினார். அப்போதுபெங்களூருவடக்குதாலுகாவில் ஹார்டுவேர் பூங்கா அமைக்க கர்நாடக தொழில் மேம்பாட்டு வாரியத்தால் நிலம் கையகப்படுத்தப்பட்டது. அதன் பிறகு அந்த நிலம் அரசாணையில் இருந்து விடுவிக்கப்பட்டது. இதனால் அரசுக்கு இழப்பு ஏற்பட்டதாகவும், முறைகேடு நடந்துள்ளதாகவும் கூறி எடியூரப்பா மீது பெங்களூரு கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு குறித்து விசாரணை நடத்திய பெங்களூரு கோர்ட்டு, எடியூரப்பாவுக்கு எதிரான மனு தள்ளுபடி செய்தது. இதை எதிர்த்து கர்நாடக ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த ஐகோர்ட்டு, கீழமை கோர்ட்டின் தீர்ப்பு ரத்து செய்யப்பட்டு, எடியூரப்பா மீதான புகார் குறித்து விசாரிக்கும்படி உத்தரவிட்டது. இதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் எடியூரப்பா மேல்முறையீடு செய்துள்ளார்.

இந்த மனு மீதான விசாரணை நிறைவடைந்ததை அடுத்து தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில் இந்த வழக்கில் சுப்ரீம் கோர்ட்டு தனது தீர்ப்பை அறிவித்தது. இதில் இந்த வழக்கை அதிக நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்றுவதாக நீதிபதிகள் அறிவித்தனர்.

## பிரதமர் மோடியுடன் அமெரிக்க துணை அதிபர் ஜேடி வான்ஸ் சந்திப்பு



புதுடெல்லி, ஏப்.23

அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ், இத்தாலி பயணத்தை முடித்துக் கொண்டு, அங்கிருந்து 4 நாட்கள் பயணமாக இந்தியா வந்தார். அவருடைய மனைவியும், இந்திய வம்சாவளி பெண்ணுமான உஷா, குழந்தைகள் எவான், விவேக், மிராபெல் ஆகியோரும் உடன் வந்தனர். அமெரிக்க ராணுவ தலைமையகமான 'பென்டகன்' உயர் அதிகாரி, அமெரிக்க வெளியுறவுத்துறை உயர் அதிகாரி உள்பட 5 உயர் அதிகாரிகளும் வருகை தந்தனர். அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது வரிவிதிப்பு அறிவித்த பிறகு, ஜே.டி.வான்ஸ் முதல்முறையாக இந்தியா வந்ததால் இந்த பயணம் முக்கியத்துவம் பெற்றது.

இன்று மாலை 6.30 மணிக்கு பிரதமர் மோடி இல்லத்துக்கு ஜே.டி.வான்ஸ் மற்றும் குடும்பத்தினர் வந்தனர். அவர்களை பிரதமர் வரவேற்றார். அதைத்தொடர்ந்து, பிரதமர் மோடி ஜே.டி.வான்ஸ் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இருவரும் விவாதித்தனர். வர்த்தகம், வரிவிதிப்பு, பிராந்திய பாதுகாப்பு ஆகியவை பேச்சுவார்த்தையில் இடம் பெற்று இருக்கலாம் எனத்தெரிகிறது.

## உத்தரகாண்டில் அதிர்ச்சி; அதிகாலையில் சாலையில் உடற்பயிற்சி செய்த இளைஞர் மாரடைப்பால் மரணம்



டேராடூன், ஏப்.23

உத்தரகாண்டின் பாவ்ரி கார்வால் பகுதியை சேர்ந்த இளைஞர் பிரமோத் பின்ஜோலா. உடலைகட்டுக்கோப்பாக வைத்து கொள்வதில் தீவிர ஆர்வம் கொண்டவர். தினமும் அதிகாலையிலேயே எழுந்து வீட்டுக்கு வெளியே சென்று உடற்பயிற்சிகளை செய்து வந்துள்ளார்.

கடந்த 2 நாட்களுக்கு முன் வீட்டை விட்டு அதிகாலையிலேயே கிளம்பி சென்ற பிரமோத் சாலையில் நின்றபடி உடற்பயிற்சி செய்துள்ளார். எனினும், உடல் சோர்வு ஏற்பட்டதும் பயிற்சியை நிறுத்தி விட்டு, ஓரத்தில் இருந்த அமரும் பலகையின் மீது அமர்ந்து கொண்டார்.

ஆனால், மீண்டும் பயிற்சி மேற்கொள்வதற்கு பதிலாக, சோர்வில் மயங்கி கீழே சரிந்து விட்டார். அதிகாலை நேரத்தில் அந்த பகுதியில் யாரும் இல்லை என கூறப்படுகிறது. நீண்ட நேரத்திற்கு பின்னரே சிலர் வந்துள்ளனர். அவர்கள் அந்த இளைஞரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

ஆனால் அதில் பலனில்லை. அவர் உயிரிழந்து விட்டார் என டாக்டர்கள் கூறி விட்டனர். அவர் மாரடைப்பால் மரணம் அடைந்து விட்டார் என முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரமோத் உடற்பயிற்சி மேற்கொள்ளும்போது, சரிந்து விழும் காட்சிகள் கொண்ட வீடியோ வைரலாகியது. இளம் வயதில், உடற்பயிற்சி செய்வதில் தீவிர ஆர்வம் கொண்ட நபர், பயிற்சி மேற்கொண்டபோது மாரடைப்பால் உயிரிழந்தது அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது.

சமீப காலங்களில், இளம் வயதில் ஆண், பெண் என இரு பாலரும் மாரடைப்பால் உயிரிழப்பது அதிகரித்து இருப்பது தெரிய வந்துள்ளது. திருமண நிகழ்ச்சி, பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்கும்போதும், நடனம் ஆடும்போதும் இதுபோன்ற அதிர்ச்சி ஏற்படுத்தும் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றன.

## சிவகங்கை தெற்கு ஒன்றியக்கழக திமுக சார்பில் முதலமைச்சர் பிறந்தநாள் விழா: 1072 பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள், மாட்டுவண்டி எல்கைப்பந்தயம்; ஒன்றியக்கழக செயலாளர் டாக்டர் ம. ஜெயராமன் தலைமையில் ஏற்பாடு

சிவகங்கை மாவட்ட சிவகங்கை தெற்கு ஒன்றிய திமுக சார்பில் மாபெரும் மாட்டுவண்டி எல்கைப்மந்தயம் நடைபெற்றது..

இந்த மாட்டுவண்டி பந்தயத்தில் 13 பெரிய மாட்டுவண்டிகளும், 19 சிறிய மாட்டுவண்டிகளும் கலந்து கொண்டன. வெற்றி பெற்ற மாட்டுவண்டிகள் , சாரதிகள், உரிமையாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நாஞ்சில் சம்பத் அவர்களின் பொதுக்கூட்டம் பிரம்மாண்டமாக நடைபெற்றது இதனைத்தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டு 1072 பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிச் சிறப்பித்தார்.

ஒன்றியக்கழக செயலாளர் டாக்டர் ம. ஜெயராமன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் துணைச்செயலாளர் கொட்டகுடி பஞ்சவர்ணம், மாவட்ட அமைப்பாளர் சிங்கமுத்து ஆகியோர் வரவேற்புரையாற்றிட கழக கொபசெ துணைச்செயலாளர் தமிழ்ப்ரியா வேங்கை பிரபாகரன், நகர்க்கழக செயலாளர் சேர்மன் துரை ஆனந்த்,திருமலைமுத்துராமலிங்கம், ஆதி. அழகர்சாமி, பாஷ்கரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்..



இந்த நிகழ்ச்சியில் மேனாள் அமைச்சர் தென்னவன், சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், மாவட்ட துணைச்செய லாளர் சேர்மன் சேங்கைமாறன்,சட்டமன்ற மேனாள் உறுப்பினர்கள் சுப. மதியரசன், சேர்மன் மாரியப்பன் கென்னடி, ஒன்றியக்கழக செயலாளர்கள் துரை. இராஜாமணி, தமிழ்மாறன், நகரம் பொன்னுச்சாமி, மாவட்ட மாணவரணி கதிர்.

இராஜ்குமார், மாவட்ட மகளிர் தொண்டரணி ஹேமலதா செந்தில், ஒன்றிய நிர்வாகிகள் துணைச்செயலாளர் சித்தலூர் முருகன், பொருளாளர் பாண்டியராஜா, மாவட்ட பிரதிநிதிகள் தியாகர்



தலைமைக்கழகத்தால் அறிவிக்கப்பட்ட சிவகங்கை வடக்கு ஒன்றிய இளைஞரணிஅமைப்பாளர்இடையமேலூர்பா.வேல்முருகன்,வாகுளத்துபட்டி அ. சரவணன், காடமுத்தான்பட்டி ப. சுரேஷ்குமார், காஞ்சிரங்கால் வீ. உதயகுமார், வீரப்பட்டி ம. கரண், நாலுகோட்டை மு. செல்வக்குமார், டி. புதூர் ஆ. கௌதம், காஞ்சிரங்கால் க. மோகன்தாஸ் ஆகியோர் முறைப்படி சிவகங்கை வடக்கு ஒன்றியக்கழக செயலாளர் திருமலை ஆ. முத்துராமலிங்கம் அவர்களை மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து பெற்றனர்... உடன் கழக நிர்வாகிகளான மாவட்ட தொழிலாளரணி துணை அமைப்பாளர் புதுப்பட்டி பா. அரச்சுணன், கழக மூத்த முன்னோடி, பொற்கிழி சிங்கினிபட்டி காவேரிமணியம் , ஒன்றிய மேனாள் பொருளாளர் , கிளைக்கழக செயலாளர் இடையமேலூர் என். சேகர் , மாவட்டக்கழக பிரதிநிதிகள் ஒக்கூர் லெ. சோமசுந்தரம், சோழபுரம் மாரி, ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தமறாக்கி அம்பலம், ஒன்றிய தொண்டரணி துணை அமைப்பாளர் சங்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் உடனிருந்தனர்...



குன்னூரில் தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் விற்பனை செய்வது தொடர்பாக காவல் துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காவல் துணை கண்காணிப்பாளர் ரவி அவர்களின் உத்தரவின் பேரில் ஆய்வாளர் சதீஷ் துணை ஆய்வாளர் மஹேந்திரன் மற்றும் ரமேஷ்,பாஷா,ஆனந்த்,ரியாஸ் ஆகியோர் அடங்கிய தனிப்படையினர் குன்னூர் குமரன் நகர் பகுதியை சேர்ந்த ரவி(48) என்பவரிடமிருந்து 12 கிலோ தடை செய்யப்பட்ட போதை பொருட்களை பறிமுதல் செய்து குற்றவாளியை நீதிமன்ற காவலில் சிறையில் அடைத்தனர்.

## வேடசந்தூர் அருகே நடந்த சாலை விபத்தில் படுகாயம் அடைந்த சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

திண்டுக்கல், வேடசந்தூர் மல்வார்பட்டி ஊராட்சி ஒத்தையூரை சேர்ந்த பாலமுருகன் மகன் சுகுமார் இவர் 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதி முடித்துள்ள நிலையில் கடந்த 5ம் தேதி இருசக்கர வாகனத்தில் தட்டார்பட்டி பிரிவு பகுதியில் சென்று கொண்டிருந்தபோது சுந்தரம் என்பவர் ஒட்டி வந்த ஆட்டோ மோதி படுகாயம் அடைந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலன் இன்றி சிறுவன் பாலமுருகன் உயிரிழந்தார். இதுகுறித்து வேடசந்தூர் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

## தர்மபுரியில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது இந்த கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள அனைத்து துறை அதிகாரிகளும் வட்டாட்சியர் கோட்டாட்சியர் ஆகியோர் கலந்து கொண்டனர் இதில் பொதுமக்கள் அடிப்படை வசதிகள், உதவித்தொகைகள், அரசு நலத்திட்ட உதவிகள் வேண்டி பொதுமக்களிடமிருந்து மொத்தம் 810 மனுக்கள் வரப்பெற்றன.

இம்மனுக்கள் மீது துறை அலுவலர்கள் அரசின் விதி முறைகளுக்கு உட்பட்டு அதற்கான தீர்வினை விரைந்து காண வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர்சதீஷ் விரைந்து நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்இதில் பல்வேறு திட்டங்களில் பொது மக்களுக்கு நல திட்டங்கள் வழங்கப்பட்டது

## ஸ்ரீ கலைமகள் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆண்டு விழா

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள புதுவயல் ஸ்ரீ கலைமகள் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி புதுவயல் நேற்று 27 ஆம் ஆண்டு 20 4 2025 ஞாயிற்றுக்கிழமை மாலை பள்ளி வளாகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது திருப்பணி செம்மல் காட்டு கோவில் திருமதி ஏ ஆர் ராதா ஆச்சி அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி விழாவை துவங்கி வைத்தார் பள்ளி தாளாளர் திரு கே ஆர் பரமேஸ்வரன் அவர்கள் நிகழ்த்தினார்பள்ளி நிர்வாக குழு உறுப்பினர் திரு கே ஆர் சேவுக பெருமாள் அவர்கள் ஆண்டு அறிக்கையை வாசித்தார்பட்டிமன்ற பேச்சாளர் திரு மதுரை ராமகிருஷ்ணா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் காரைக்குடி காவல் கண்காணிப்பாளர் திரு டி .பார்த்திபன் அவர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்றஅவர்களை பரிசுகள் வழங்கி கௌரவித்தார்விழாவில் நிர்வாகக் குழுவின் மற்ற உறுப்பினர்கள் திரு கே ஆர் கண்ணன் திரு வி சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்மேலும் பள்ளியின் முன்னாள் மாணவர் ஜி ஸ்ரீராம் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர் புதுவயல் பகுதியைச் சேர்ந்த புதுவயல் பேரூர் ஆட்சி தலைவர் திரு. முகமது மீரா சாக்கோட்டை கிழக்கு ஒன்றிய அதிமுக செயலாளர் கே ஆர். மாசான் காங்கிரஸ் கமிட்டியின் புதுவயல் நகர தலைவர் திரு மீரா அவர்கள். பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த மத்திய அரசு வழக்கறிஞர் எஸ் எஸ். செல்வகணபதி அவர்கள் சாக்கோட்டை மற்றும் சாக்கவயல் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் என்.



லதா அவர்கள் ஜி. ஈஸ்வரி அவர்கள் தமிழ்நாடு தனியார் பள்ளி சங்கம் மாவட்ட நிர்வாகி சண்முகநாதன் வேல் முருகன் சித்திக் மற்றும் தெய்வசிகாமணி ஆகியோரும் கலந்து கொண்டனர் இறுதியாக மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது விழாவிற்கு பள்ளித் துறை முதல்வர் எம் பூபதி ராஜா தலைமையில் ஆசிரிய ஆசிரியர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்



தினகனி



## சிவகங்கை மாவட்ட விளையாட்டு நல அலுவலரிடம் வாழ்த்து பெற்ற வீரர்.



சிவகங்கை மன்னர் துரைசிங்கம்அரசுகலைக் கல்லூரியில் பயிலும் மாணவர் முத்துகிருஷ்ணன்.. இவர் ஈரோட்டில் கடந்த 190425 அன்று நடைபெற்ற தமிழ்நாடு மண்டல அளவிலான சீனியர் அத்லடிக் போட்டியில் மும்முறை தாண்டுதலில் முதலிடம் பெற்று தங்க பதக்கமும், நீளம் தாண்டுதலில் இரண்டாமிடம் பெற்று வெள்ளிப் பதக்கமும் வென்றார்.. இவரை மாவட்ட விளையாட்டு அலுவலர் ரமேஷ் கண்ணன் மற்றும் தடகள பயிற்சியாளர் ஆறுமுகம் ஆகியோர் வெகுவாக பாராட்டினார்கள்..

## திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தில் அரசின் சாதனைகள் புகைப்பட கண்காட்சி ஏராளமான பொதுமக்கள் பார்வை



திருவாரூர், ஏப்.23

திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தில் நடைபெற்ற அரசின் சாதனைகள் குறித்த புகைப்பட கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர். திருவாரூர் மாவட்டம் நன்னிலம் ஒன்றியம் குவளைக்கால் பகுதியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்த பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும்வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக புகைப்படக்கண்காட்சியானது நடைபெற்றது.

இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மூலம் ஏற்கனவே துவக்கி வைக்கப்பட்ட புதிய திட்டங்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியது குறித்த புகைப்படங்கள் வைக்கப்பட்டிருந்தது.

மேலும், தமிழ்நாடு அரசின்பல்வேறுசிறப்புதிட்டங்களான மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் திட்டம், இல்லம் தேடி கல்வி, நான் முதல்வன், வானவில் மன்றம், பசுமை தமிழகம், நம்ம பள்ளி பவுண்டேசன், நம்ம பள்ளி, நம்ம பெருமை, எண்ணும் எழுத்தும், கல்லூரி கனவு, மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள், கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாம், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு திட்டம், விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்குதல், விவசாயிகளுக்கு ஒரு லட்சம் மின் இணைப்பு வழங்கும்திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், புதுமைபெண் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுவினர்களுக்கு தொழில் சார் கடனுதவி வழங்குதல், அர்ச்சகர்கள் மற்றும் கோவில் பூசாரிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டம், புதிய தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தம்,

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் மற்றும் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி ராஜா, மற்றும் மாவட்டத்தில் பிறதுறைகளின் அமைச்சர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் மற்றும் மாவட்ட கலெக்டர் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள்போன்றவை குறித்த புகைப்படங்கள் இடம் பெற்றிருந்தநிலையில் இதனை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செல்வகுமார் தலைமையில் அலுவலர்கள் செய்திருந்தனர்.

## இந்திரா காந்தி நகர் அங்காள ஈஸ்வரி காளியம்மன் கோயில் 53வது தீமிதி திருவிழா: தூய்மை பணி நடைபெற்றது



சென்னை, ஏப்.22

இந்திரா காந்தி நகர் பகுதியில் உள்ள அங்காள ஈஸ்வரி காளியம்மன் கோயிலில் 53வது ஆண்டு தீமிதி திருவிழா எதிர்வரும் மே 18ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு, மே 9ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று 'காப்பு கட்டும்' நிகழ்வு நடைபெறவுள்ளது.

திருவிழாவை முன்னிட்டு 36வது வார்டு மக்கல்வாழ்வுப் பகுதிகளில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் வசதிக்காக சாலை, சாக்கடை உள்ளிட்ட பகுதிகளில் மாசுபாடுகளை அகற்றும் பணி மேற்கொள்ள ப்பட்டது.

தீமிதி திருவிழாவிற்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்க எதிர்பார்க்கப்படும் நிலையில், விழாவின் முன்னேற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

## வேதாரண்யத்தில் உப்பு உற்பத்தி தீவிரம்; ஒரு டன் ரூ.2500 வரை விற்பனை



வேதாரண்யம், ஏப்.23

வேதாரண்யத்தில் உப்பு உற்பத்தி தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஒரு டன் உப்பு ரூ.2000 முதல் ரூ.2500 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.தமிழ்நாட்டில் தூத்துக்குடிக்கு அடுத்தபடியாக உப்பு உற்பத்தியில் வேதாரண்யம் இரண்டாம் இடம் வகிக்கிறது.

இங்கு அகஸ்தியன் பள்ளி, கோடியக்காடு, கடிநெல்வயல் உள்ளிட்ட பகுதிகளில் 9ஆயிரம் ஏக்கரில் உப்பு உற்பத்தி நடைபெற்று வருகிறது.

இத்தொழில் நேரடியாகவும், மறைமுகமாகவும் 10ஆயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு ஆண்டு ஒன்றுக்கு 6 லட்சம் மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி நடைபெறும். இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு லாரி மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.

தற்போது வேதாரண்யம் பகுதியில் வெயில் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால் உப்பு உற்பத்தி முழுவீச்சில் நடைபெறுகிறது. உப்பு உற்பத்தியில் ஆண், பெண் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கானோர் இரவு பகலாக ஈடுபட்டுள்ளனர். கடந்தமாதம் பருவம் தவறி பெய்த மழையால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதனால் போதுமான உப்பு இருப்பு வைக்க இயலாத நிலையில் தற்போது உற்பத்தி செய்யப்படும் உப்பை உடனுக்குடன் விற்பனைக்காக லாரி மூலம் அனுப்பும் பணியும் நடைபெற்று வருகிறது. ஒரு டன் உப்பு ரூ.2000 முதல் ரூ.2500 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வெயிலின் தாக்கத்தால் முழுவீச்சில் உப்பு உற்பத்தி நடந்தாலும் பருவம் தவறி பெய்த மழையால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதனால் இந்த ஆண்டுக்கான உப்பு உற்பத்தி இலக்கான 6 லட்சம் டன் எட்டுவது கடினம் என உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

## திருப்பூர் மாவட்டம் நெடுஞ்சாலை துறை கோட்ட பொறியாளர் ரத்தினசாமி உத்தரவின்படி சாலைகள் பராமரிப்பு பணிகள்



திருப்பூர் நெடுஞ்சாலை வடக்கு உட்கோட்டத்திற்கு உட்பட்ட மாநில நெடுஞ்சாலை ஆன காங்கேயம் சாலை கிலோமீட்டர் 0/0. 16/0. திருப்பூர் சி டி சி டிப்போ முதல் படியூர் வரை போக்குவரத்து சீராக செல்லும் வகையில் தார் நொடிகள் போடப்பட்டு. சாலை பராமரிப்பு பணி உதவி கோட்ட பொறியாளர் விஜயகுமார்மற்றும்இளநிலை பொறியாளர் ராஜேஷ் இவர்களது மேற்பார்வையில் இருசக்கரம் மற்றும் நான்கு சக்கரம் கனரக வாகனங்கள் இலகுவாக சென்று வர சாலைகளை அமைத்தனர். அதன்பின்னர் அவிநாசி சாலை செல்லும் வழியில் அமைந்துள்ள ரிங் ரோடு திருமுருகன் பூண்டி நல்லூர் 15 வேலம்பாளையம் சாலை கிலோமீட்டர். 0/0. 16/4 திருமுருகன் பூண்டி முதல் நல்லூர் சாலை கூலிபாளையம் சாலை கிலோமீட்டர். 0/0. சாலையில் உள்ள இரு உறங்களிலும் முள்புதர்களை அகற்றும் பணிகளை வடக்கு உதவி கோட்ட பொறியாளர் விஜயகுமார்மற்றும்இளநிலை பொறியாளர் ராஜேஷ் அவர்கள் மேற்பார்வையில் சாலை பராமரிப்பு பணிகளும் மற்றும் இரு புறமும் உள்ள முள் புதர்களை ஜேசிபி இயந்திரத்தின் மூலம் அதனை அகற்றி மக்களுக்கும் வாகனங்களும் சென்று வர ஏதுவாக சாலை பணிகளை செய்து முடித்தனர் இதைக் கண்ட பகுதி மக்கள் மற்றும் சமூக அலுவலர்கள் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளை எங்களுக்கு போக்குவரத்தும் இடையூறு இல்லாமல் செய்து கொடுத்த நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்

## நாகர்கோவிலில் கலெக்டர் அலுவலகத்தில் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனுக்களுடன் திரண்ட மக்கள்



நாகர்கோவில், ஏப்.23

நாகர்கோவிலில் குமரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்ற நிலையில் மனுக்களுடன் வந்த மக்களிடம் போலீசார்தீவிரசோதனை நடத்தினர்.

நாகர்கோவிலில் உள்ள குமரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று காலையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் கலெக்டர் நேரடியாக குறைகளை கேட்டு மனுக்களை பெறுவது வழக்கம் என்பதால் பொதுமக்கள் அதிக அளவில் வந்து மனுக்களை அளித்து வருகின்றனர்.

இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, நலத்திட்ட உதவிகள் வழங்க கேட்டும் மக்கள் மனுக்களை அளித்தனர். கடந்த 14ம் தேதி மக்கள் குறைதீர்க்கும் நாள் அன்று விடுமுறை என்பதால் நேற்று வழக்கத்தை விட கூட்டம் சற்று அதிகமாக காணப்பட்டது.

கலெக்டர் அலுவலக நுழைவு வாயிலில் மனுக்கள் பதிவு செய்தல் நடந்தது. இங்கு நீண்ட வரிசையில் நின்று மக்கள் மனுக்களை பதிவு செய்தனர். இதனால் அந்த பகுதியில் கூட்டம் நிரம்பி வழிந்தது.

மனுக்கள் உடனுக்குடன் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஆன்லைனில் அனுப்பி வைக்கும் பணிகளும் நடந்தது. கோரிக்கை மனுக்கள் அளிக்க வருகின்ற சிலர் அவ்வப்போது கலெக்டர் அலுவலகத்தில் மண்ணெண்ணெய் ஊற்றி திடீர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்ற நிகழ்வுகளும் நடைபெற்று வருகிறது.

இதன் காரணமாக அசம்பாவித சம்பவங்களை தடுக்கும் வகையில் கலெக்டர் அலுவலகத்தில்முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருந்தது. நாகர்கோவிலில் நேசமணி நகர் காவல்நிலைய போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் பொதுமக்கள் கொண்டு வந்த உடைமைகள், தண்ணீர் பாட்டில் போன்றவற்றை போலீசார் தீவிரமாக பரிசோதனை செய்த பிறகே கலெக்டர் அலுவலகத்திற்குள் பொதுமக்களை அனுமதித்தனர்.

## ராயபுரத்தில் வேளாண் மாணவிகளுக்கு ஒருங்கிணைந்த பயிற்சி



நீடாமங்கலம் , ஏப்.23

நீடாமங்கலம் அருகே ராயபுரத்தில், திருச்சி வேளாண் கல்லூரி மாணவிகளுக்கு ஒருங்கிணைந்த பயிற்சி நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும்திருச்சி அன்பில் தர்மலிங்கம்வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும்வேளாண் கல்லூரி மாணவிகள் ராயபுரம் அருகில் உள்ள ஒருங்கிணைந்த வேளாண் பண்ணையில் பயிற்சி நடைபெற்றது. இயற்கையான முறையில் கத்தரி, மிளகாய், வெள்ளரி சாகுபடி செய்யப்படுவதை, மாணவிகளுக்கு ஒருங்கிணைந்த வேளாண்மை பண்ணை உரிமையாளர் எடுத்துரைத்தார் . மேலும் மீன் குட்டை அமைத்து மீன் பண்ணையுடன் சேர்ந்து ஆடு மாடு மற்றும் கோழி பண்ணைகளை பார்வையிட்டனர். இங்கு இயற்கையான முறையில் விவசாயத்தில் விளையும் வெள்ளரிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## தமிழ்நாட்டில் 32 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல்: அமைச்சர் சக்கரபாணி பதில்



சென்னை, ஏப்.24

தமிழ்நாட்டில் தற்போது வரை 32 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் சக்கரபாணி தெரிவித்துள்ளார். ரேஷன் கடைகளுக்கு முன்பு மரங்கள் நடவும்மேற்கூரைஅமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். பெண்கள் அதிக அளவில் வருவதால் ரேஷன் கடைகளுக்கு முன்பு மரம் நடவும் நிரந்தர மேற்கூரை அமைக்கவும் கோரிக்கை விடுத்துள்ளதாக சட்டப் பேரவையில் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேஷ்வரன் விடுத்த கோரிக்கைக்கு அமைச்சர் பதில் அளித்துள்ளார்.

## திருச்செந்தூர், உடன்குடியில் கிணற்றில் விழுந்த ஆடு, பாம்பு மீட்பு



திருச்செந்தூர், ஏப்.23

திருச்செந்தூர், உடன்குடியில் கிணற்றுக்குள் விழுந்த ஆடு, பாம்பை தீயணைப்பு துறையினர் மீட்டனர். முருகனின் அறுபடை வீடுகளில் 2ம் படைவீடான திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு வரும் பக்தர்கள் கடல் மற்றும் நாழிக்கிணறில் நீராடுவதும், இப்பகுதியில் அமைந்துள்ள கோயிலுக்கு திருப்பணி செய்த மூவர் சமாதுவில் சுவாமி தரிசனம் செய்வதும் வழக்கம்.

இந்த பிரசித்திப் பெற்ற மூவர் சமாது வளாகத்தில் உள்ள சுமார் 50 அடி ஆழமுள்ள கிணறு மூடி போட்டு மூடப்பட்டுள்ளது. இதில் சிறிய அளவிலான ஓட்டை இருந்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை இப்பகுதிக்கு சென்ற ஆடு, இந்த ஓட்டை வழியாக கிணற்றில் தவறி விழுந்தது.

இதுகுறித்து பூஜகர் ஆறுமுகம் கொடுத்த தகவலின் பேரில், திருச்செந்தூர் தீயணைப்புத் துறையினர் விரைந்து வந்தனர். நிலைய அலுவலர் மோகன் தலைமையிலான குழுவினர் நீண்ட நேரம் போராடி கிணற்றுக்குள் தவறி விழுந்த ஆட்டை பத்திரமாக மீட்டனர். கிணற்றுக்குள் விழுந்த ஆட்டை போராடி மீட்ட தீயணைப்புத் துறையினருக்கு பொதுமக்களும், பக்தர்களும் பாராட்டு தெரிவித்தனர்.

இதேபோல் உடன்குடி புதுமனை தெருவை சேர்ந்த கன்சல் ரகுமான் என்பவரது வீட்டின் பின்புறமுள்ள கிணற்றில் நல்ல பாம்பு விழுந்து கிடந்தது. இதுகுறித்து கார்த்திக், திருச்செந்தூர் தீயணைப்பு நிலையத்திற்குதகவல் தெரிவித்தார்.

இதனையடுத்து திருச்செந்தூர் தீயணைப்புநிலைய அலுவலர் ராஜமூர்த்தி தலைமையில் நிலைய அலுவலர் போக்குவரத்து சிவானந்தராம், கோகுல், முன்னணி தீயணைப்பு ராதாகிருஷ்ணன் மற்றும் வீரர்கள் வீரசெல்வன், மாரி, ஆனந்தராஜ், விநாயகமூர்த்தி, சுதாகர் மற்றும் அகஸ்டின் ஆகியோர் சென்று விலங்கு மீட்பு வலை மூலம் கிணற்றுக்குள் கிடந்த பாம்பை உயிருடன் மீட்டு வனப்பகுதியில் விட்டனர்.

## வழித்தட பிரச்னை, பட்டா கேட்டு கலெக்டர் ஆபிசில் ஒரே நாளில் 2 குடும்பத்தினர் தீக்குளிக்க முயற்சி



தர்மபுரி, ஏப்.23

தர்மபுரிகலெக்டர்அலுவலகத்தில்வழித்தடபிரச்னை மற்றும் வீட்டுமனைபட்டா கேட்டு, 2 குடும்பத்தினர் தீக்குளிக்க முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது.தர்மபுரி மாவட்டம், மொரப்பூர் சாமாண்டஅள்ளியைச் சேர்ந்தவர்சிவக்குமார்(45), கூலி தொழிலாளி.

இவரது மனைவி சென்னம்மாள் (40). இவர்களுக்கும், பக்கத்து வீட்டைச் சேர்ந்த உறவினர் குடும்பத்திற்கும், நீண்ட காலமாகவழித்தடபிரச்னை உள்ளது. இதுகுறித்து போலீசில் புகாரளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிகிறது.

இந்நிலையில், நேற்று கணவன், மனைவி இருவரும் கோரிக்கை மனு அளிக்க வந்தபோது, பாட்டிலில் மறைத்து வைத்திருந்த பெட்ரோலை எடுத்து, உடலில் ஊற்றிக் கொண்டனர். இதை பார்த்த அங்கிருந்த போலீசார், அவர்களிடமிருந்து கேனை பறித்து, தண்ணீரை ஊற்றினர்.

பின்னர், கொண்டு வந்த மனுவை அதிகாரிகளிடம் கொடுக்க நடவடிக்கை எடுத்தனர். இருவரையும் கைது செய்து, தர்மபுரி டவுன் போலீஸ் ஸ்டேஷனுக்கு போலீசார் அழைத்து சென்றனர். பின்னர், பிணையில் விடுவித்தனர்.

இதேபோல், பென்னாகரம் அருகே வண்ணாத்திப்பட்டியை சேர்ந்த தொழிலாளி மாதப்பன்(70), தனது மனைவி மங்கம்மாளுடன் (56) நேற்று கலெக்டர் அலுவலகத்திற்கு மனு கொடுக்க வந்தார். அப்போது, மறைத்து வைத்திருந்த கேனில் இருந்த மண்ணெண்ணையை உடலில் மாதப்பன் ஊற்றினார். அங்கிருந்த போலீசார் அவரை தடுத்து நிறுத்தி, கேனை பறித்தனர். பின்னர், அவர் மீது தண்ணீர் ஊற்றி விசாரித்தனர்.

இதில் 50 ஆண்டுகளாக அரசு புறம்போக்கு நிலத்தில் வசித்து வருவதாகவும், அந்த நிலத்திற்கு வீட்டுமனைப்பட்டா கேட்டு மனு அளித்தும், அதிகாரிகள் பட்டா தர மறுப்பதாக தெரிவித்தார். இதையடுத்து, மாதப்பன் வைத்திருந்த மனுவை பெற்று, அதிகாரிகளிடம் வழங்கப்பட்டது. பின்னர், அவரை போலீசார் கைது செய்து, தர்மபுரி டவுன் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து சென்று, பிணையில் விடுவித்தனர்.

# சிவகங்கை அருகே டேங்கர் லாரிகள், பேருந்து மோதல்

சிவகங்கை, ஏப்.23

சிவகங்கை அருகே மண்ணெண்ணெய் ஏற்றி வந்த லாரி, எரிவாயு டேங்கர் லாரி, பேருந்து ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. சிவகங்கை மதுரை சாலையில் செம்பூர் காலனி பகுதியில் 3 வாகனங்களும் மோதிக் கொண்டன. விபத்து காரணமாக சிவகங்கை மதுரை சாலையில் வாகன போக்குவரத்து பாதிக்கப்பட்டது.



மண்ணெண்ணெய், எரிவாயு டேங்கர் லாரிகள் விபத்தால், தீ ஏற்படாத வண்ணம் தீயணைப்புத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டனர். விபத்தில் அரசு பேருந்து ஓட்டுநர், 10 பயணிகள் காயம் அடைந்த நிலையில், சிவகங்கை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# நீலகிரி: காட்டு யானை தாக்கி பெண் பலி



நீலகிரி, ஏப்.23

நீலகிரி மாவட்டம் மசினகுடி பகுதியை சேர்ந்தவர் சரசு(58). இவர் நேற்று மாலை அங்குள்ள பொக்கபுரம் சாலையில் தனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். அப்போது, திடீரென வந்த காட்டு யானை, சரசை தாக்கி தூக்கி வீசியது. இதில் அவர் படுகாயம் அடைந்தார். உடனடியாக அவரை உள்ளூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அங்குள்ளவர்கள் அனுமதித்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக ஊட்டி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி இரவு 11 மணியளவில் உயிரிழந்தார். சம்பவம் தொடர்பாக வனத்துறை மற்றும் போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். மேலும், காட்டு யானையை வனப்பகுதிக்குள் விரட்ட வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# ரோஜா கண்காட்சி நெருங்கிய நிலையில் பூங்கா பராமரிப்பில் ஊழியர்கள் தீவிர பணிகள்

ஊட்டி , ஏப்.23

ரோஜாகண்காட்சி நெருங்கிய நிலையில், ஊட்டி ரோஜா பூங்காவை தயார் செய்யும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. ஊட்டியில் கோடை சீசன் களை கட்டத்துவங்கியுள்ளது. அடுத்த மாதம் நடக்கவுள்ள மலர் கண்காட்சிக்காக தற்போது தாவரவியல் பூங்கா தயார் செய்யப்பட்டு வருகிறது.

அதேபோல், ரோஜா பூங்காவும் தற்போது தயார் செய்யப்பட்டு வருகின்றன. ஊட்டி ரோஜா பூங்காவில் கடந்த இரு மாதங்களுக்கு முன் அனைத்து செடிகளும் கவாத்து செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

எனினும், மழை குறைவால் மலர்கள் பூப்பதில் சற்று தாமதம் ஏற்பட்டது. இருப்பினும், பூங்கா நிர்வாகம் நாள் தோறும் செடிகளுக்கு குழாய்கள் மூலம் தண்ணீர் பாய்ச்சும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால், பெரும்பாலான செடிகளில் ரோஜா மலர்கள் பூத்துள்ளன. ரோஜா பூங்காவில் பூத்துள்ள ரோஜா மலர்களை கண்டு சுற்றுலா பயணிகள் மகிழ்ந்து வருகின்றனர்.

ஊட்டி ரோஜா பூங்காவில் 4 ஆயிரம் வகை ரோஜா வகைகளும், 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரோஜா செடிகளும் உள்ளன. மேலும், வனப்பகுதிகளில் காணப்படும் ரோஜா செடிகள் மற்றும் நாட்டு வகை ரோஜா மலர் செடிகளும் நடவு செய்யப்பட்டுள்ளன.



இச்செடிகளில் தற்போது ரோஜா மலர்கள் பூத்துள்ளன. அடுத்த மாதம் 10ம் தேதி துவங்கி 12ம் தேதி வரை நடக்கிறது. ரோஜா கண்காட்சி நெருங்கிய நிலையில், தற்போது பூங்காவை தயார் செய்யும் பணியில் ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

# ஸ்ரீரங்கம் சித்திரை தேர்த்திருவிழா: தங்க கருட வாகனத்தில் வீதி உலா வந்த நம்பெருமாள்


ஸ்ரீரங்கம், ஏப்.23

ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவில் சித்திரை தேர்த் திருவிழா கடந்த 18ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவையொட்டி தினமும் நம்பெருமாள் பல்வேறு வாகனங்களில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். விழாவின் 4ம் நாளான நேற்று அதிகாலை 3.30 மணிக்கு நம்பெருமாள் கண்ணாடி அறையில் இருந்து புறப்பட்டு அதிகாலை 3.45 மணிக்கு வாகன மண்டபம் வந்தடைந்தார்.

அங்கிருந்து காலை 4.30 மணிக்கு நம்பெருமாள் இரட்டை பிரபை வாகனத்தில் புறப்பட்டு சித்திரை வீதிகளில் வலம் வந்து காலை 6 மணிக்கு வாகன மண்டபம் வந்தடைந்தார். மண்டபத்தில் இருந்து காலை 7.15 மணிக்கு பல்லக்கில் புறப்பட்டு வழிநடை உபயங்கள் கண்டருளி பகல் 11 மணிக்கு திருச்சி ஆரியவைஸ்யாள் ஆஸ்தான மண்டபம் சென்றடைந்தார்.

அங்கிருந்து மாலை 6 மணிக்கு தங்க கருட வாகனத்தில் புறப்பட்டு சித்திரை வீதிகளில் வலம் வந்து இரவு 8.45 மணிக்கு வாகன மண்டபம் வந்தடைந்தார். அங்கிருந்து புறப்பட்டு இரவு 9 மணிக்கு கண்ணாடி அறையை சென்றடைந்தார்.

இன்று (செவ்வாய்க்கிழமை) காலை சேஷ வாகனத்தில் உலா வந்தார். மாலையில் அனுமந்த வாகனத்திலும், நாளை





(புதன்கிழமை) காலை தங்க ஹம்ச வாகனத்திலும், மாலை யானை வாகனத்திலும் நம்பெருமாள் எழுந்தருளி சித்திரை வீதிகளில் உலா வருகிறார்.

24ந்தேதி நெல்லளவு கண்டருளுகிறார். 25ந்தேதி காலை வெள்ளி குதிரை வாகனத்திலும், மாலை தங்கக்குதிரை வாகனத்திலும் வீதி உலா வருகிறார். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சித்திரை தேரோட்டம் வருகிற 26ந்தேதி நடைபெறுகிறது. 27ந் தேதி சப்தாவரணம் நடைபெறுகிறது. விழாவின் நிறைவு நாளான 28ந் தேதி நம்பெருமாள் ஆளும்பல்லக்கில் எழுந்தருளி வீதி உலா வருகிறார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் இணை ஆணையர் சிவராம்குமார், கோவில் உள்துறை கண்காணிப்பாளர் வேல்முருகன் மற்றும் ஊழியர்கள் செய்துள்ளனர்.

# செங்கல்பட்டு மாவட்டத்தில் ரூ.1,000 கோடியில் பாதாள சாக்கடை பணிகள்: அமைச்சர் கே.என்.நேரு தகவல்

சென்னை ஏப்.23

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தில் பேசிய செங்கல்பட்டு எம்.எல்.ஏ. வரலட்சுமி, மறைமலைநகர் நின்னக்கரை ஏரியில் கழிவுநீர் விடுவிப்பதைத் தடுக்க அரசு ஆவண செய்யுமா என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, "மறைமலை நகர் பகுதிகளில் 33 நீர் நிலைகள் உள்ளது. இந்தப் பகுதிகளில் தற்போது, 2.20 எம்எல்டி கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம் உள்ளது. மேலும், 37 கோடி செலவில் 15.92 எம்எல்டி கழிவு நீரை சுத்திகரிக்கும் வகையில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க டெண்டர் கோரப்பட்டு தற்போது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. விரைவில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய செங்கல்பட்டு எம்.எல்.ஏ. வரலட்சுமி, மறைமலைநகர் நின்னக்கரை ஏரியை தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய அமைச்சர் கே.என். நேரு பட்டியலிட்டு கூறியதாவது:



சென்னை மாநகர் பகுதி தவிர்த்து சென்னை புறநகர் பகுதிகளில் 3,898 நீர் நிலைகள் உள்ளது. இதில் தாம்பரம் பகுதிகளில் 211 கோடி செலவில் தற்போது பாதாள சாக்கடை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் விடுபட்ட பகுதிகளில் 780 கோடி செலவில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதைத் தவிர்த்து செங்கல்பட்டு பகுதியில், 76.26 கோடி, மதுராந்தகம் பகுதியில் 9.50 கோடி, மறைமலைநகர் பகுதிகளில் 300.57 கோடியில் பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்தப் பணிகள் எல்லாம் முடிந்த பிறகு சுத்திகரிக்கப்பட்ட நீர் மட்டுமே நீர் நிலைகளுக்கு செல்லும். எனவே நீர் நிலைகள் மாசுபடுவது தடுக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சென்னை: போராட்டத்தில் ஈடுபட்ட மாற்று திறனாளிகள் கைது

சென்னை ஏப்.23

அண்டை மாநிலமான ஆந்திராவில் வழங்குவதைப்போல, தமிழகத்திலும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும், புதியதாக விண்ணப்பித்து காத்திருக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும், தகுதியான அனைவருக்கும் உதவித்தொகை வழங்க வேண்டும், மகாத்மா காந்தி தேசிய வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தில், விண்ணப்பித்த அனைவருக்கும் 100 நாட்கள் வேலை கொடுக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோயம்பேடு பஸ் நிலையத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட மாற்றுத்திறனாளிகள் கைது செய்யப்பட்டனர்.



கலைந்து செல்ல மறுத்து தரையில் படுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களை குண்டுக்கட்டாக போலீசார் கைது செய்தனர். கோட்டையை நோக்கி செல்ல முயன்ற மாற்றுத் திறனாளிகள் கோயம்பேடு பஸ் நிலையத்திலேயே தடுத்து நிறுத்தப்பட்டனர்.

சென்னை சேப்பாக்கம் எழிலகத்தில் இன்று நடைபெற இருந்த கோட்டை முற்றுகை போராட்டத்தில் பங்கேற்க வெளி மாவட்டங்களில் இருந்து வந்த மாற்றுத்திறனாளிகளை பஸ் நிலையங்களில் வைத்து போலீசார் கைது செய்தனர்.

# குரூப் டி பணியிடங்கள்: அரசாணையை ரத்து செய்ய வேண்டும் தமிழக அரசுக்கு அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை ஏப்.23

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ்நாட்டில் உள்ள அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இனி அலுவலக உதவியாளர் உள்ளிட்ட அனைத்து குரூப் டி பணியாளர்களையும் நிரந்தரமாக நியமிக்கக்கூடாது என்றும், ஒப்பந்தம் அல்லது அவுட்சோர்சிங் எனப்படும் குத்தகை முறையில் தான் நியமிக்க வேண்டும் என்றும் தமிழக அரசு ஆணையிட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் தற்காலிக நியமனங்களை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் அதிகரித்து வரும் நிலையில், நிரந்தரப் பணியிடங்களையும் ஒப்பந்தப் பணியிடங்களாக தமிழக அரசு மாற்றி வருவது கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாட்டில் பல்கலைக்கழகங்கள், அரசு கல்லூரிகள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் குரூப் டி பணியாளர்களில் பெரும்பான்மையினர் குத்தகை முறையில் தான் நியமிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு மிகக்குறைந்த ஊதியமே வழங்கப்படுவதால் மிகப்பெரிய அளவில் மனிதவளச் சுரண்டல்கள் நடைபெறுகின்றன; இன்னொருபுறம் குத்தகை முறையில் பணியாளர்கள் நியமிக்கப்படுவதால் அவர்கள் இழைக்கும் தவறுகளுக்கு அவர்களை பொறுப்பேற்கச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அரசு அலுவலகங்களில் பராமரிப்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவை இரண்டுமே தவிர்க்கப்பட வேண்டியவை ஆகும்.

உயர்கல்வி நிறுவனங்களிலும், சில பொதுத்துறை நிறுவனங்களிலும் மட்டும் நடைமுறையில் உள்ள குத்தகை முறை நியமனங்களை அனைத்துத் துறைகளுக்கும் நீட்டிக்கவும் தமிழக அரசு முடிவு செய்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அப்படி ஒரு முடிவு



எடுக்கப்பட்டால் தமிழ்நாட்டில் ஒன்றரை லட்சம் பணியிடங்கள் ரத்து செய்யப்படும் நிலை உருவாகும். இது திமுக அளித்த வாக்குறுதிகளுக்கு எதிரானது ஆகும்.

திமுக ஆட்சிக்கு வந்தால் 10 ஆண்டுகளுக்கும் மேலாக பணி செய்த தற்காலிக பணியாளர்கள் அனைவரும் பணி நிலைப்பு செய்யப்படுவார்கள்; மூன்றரை லட்சம் அரசு வேலைகள் வழங்கப்படும்; இரண்டு லட்சம் புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாதது மட்டுமின்றி அதற்கு முற்றிலும் மாறாக, இருக்கும் பணியிடங்களை ஒழிப்பது, நிரந்தர பணியிடங்களை ஒப்பந்த பணியிடங்களாக மாற்றுவது போன்ற செயல்களில் தமிழக அரசு ஈடுபட்டு வருகிறது. அதுமட்டுமின்றி, இத்தகைய நியமனங்களில் இட ஒதுக்கீட்டு முறை கடைபிடிக்கப்படுவதில்லை என்பதால் இது சமூகநீதிக்கும் எதிரானது ஆகும்.

எனவே, அரசு உதவி பெறும் கல்லூரிகளில் குரூப் டி பணியிடங்களை ஒழித்து விட்டு, குத்தகை நியமனங்களுக்கு அனுமதி அளித்து உயர்கல்வித்துறை மூலம் கடந்த 3ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள 66 ஆம் எண் கொண்ட அரசாணையை தமிழக அரசு ரத்து செய்ய வேண்டும். அனைத்துத் துறைகளிலும் குரூப் டி பணியிடங்கள் நிரந்தர அடிப்படையிலேயே நியமிக்கப்படும் என்றும் அரசு அறிவிக்க வேண்டும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராகுகேது பெயர்ச்சி எப்போது...? திருநாகேஸ்வரம் கோவில் வெளியிட்ட முக்கிய தகவல்

திருநாகேஸ்வரம், ஏப்.23

2025 ராகுகேது பெயர்ச்சி ஏப். 26ம் தேதி நிகழ உள்ளதாக திருநாகேஸ்வரம் கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கும்பகோணம் அருகில் உள்ள திருநாகேஸ்வரத்தில் அமைந்துள்ள நாகநாத சுவாமி ஆலயத்தில் ராகு பகவான் தனி சன்னதி கொண்டு மங்கள ராகுவாக அருள்பாலிக்கிறார். நவகிரக தலங்களில் இந்த தலம் ராகு பகவானுக்குரிய பரிகார தலமாகவும் விளங்குகிறது.

18 மாதங்களுக்கு ஒருமுறை ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்கு இடம் பெயரும் ராகு பகவான் வரும் 26ஆம் தேதி சனிக்கிழமை மாலை 4:20 மணிக்கு மீன ராசியிலிருந்து கும்ப ராசிக்கு இடப்பெயற்சி அடைகிறார்.

இதனை முன்னிட்டு ராகுக்காண பரிகாரத்தலமாக விளங்கும் திருநாகேஸ்வரம் நாகநாத சுவாமி ஆலயத்தில் தனி சன்னதி கொண்டுள்ள மங்கள ராகுக்கு இன்று சிறப்புப் பூஜைகள் நடைபெற்றன.

எதிர்வரும்ராகுபெயர்ச்சியை முன்னிட்டு இன்று




காலை இவ்வாலயத்தில் உள்ள ராகு பகவானுக்கு பல்வேறு மங்களப் பொருள்களால் சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து சிறப்புத் தீபாரதனைகள் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

இந்த ராகு பெயர்ச்சியினால் ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், மீனம் ஆகிய ராசிக்காரர்கள் பரிகாரம் செய்து கொள்ள வேண்டும் என கூறப்படுகிறது.

# சித்ரா பவுர்ணமி கிரிவலம்: திருவண்ணாமலையில் கூடுதல் ஏற்பாடுகள்; விஐபி தரிசனம் ரத்து

திருவண்ணாமலை ஏப்.23

திருவண்ணாமலையில் மாதந்தோறும் பவுர்ணமி கிரிவலம் பிரசித்தி பெற்றது என்றாலும், சித்திரை மாதம் வரும் சித்ரா பவுர்ணமி கிரிவலம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. அந்த வகையில், அடுத்த மாதம் (மே) 11ந் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8.01 மணி முதல் மறுநாள் இரவு 10.25 மணி வரை சித்ரா பவுர்ணமி கிரிவலம் வருகிறது.

வழக்கத்தைவிட சித்ரா பவுர்ணமிக்கு கிரிவலம் வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்பதால், பல்வேறு முன்னேற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் செய்து வருகிறது.

அந்த வகையில், 20 இடங்களில் தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட இருக்கிறது. மேலும், அண்ணாமலையார் கோவில் மற்றும் கிரிவலப் பாதை பகுதியில் பக்தர்களுக்குத் தேவையான இடங்களில் போதுமான கழிவறைகளும், குடிநீர் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட இருக்கின்றன.

அனுமதி பெற்ற இடங்களில் மட்டுமே அன்னதானம் வழங்க வேண்டும் என்றும்,



முறையான தரமான உணவுகள் வழங்க வேண்டும் இல்லையேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திருவண்ணாமலை மாவட்ட கலெக்டர் தர்ப்பகராஜ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் சித்ரா பவுர்ணமி தினத்தன்று திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் இந்த ஆண்டும் விஐபி தரிசனம் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் போலி நெய் தீபம் விற்பனை செய்யவும், கற்பூரம் ஏற்றவும் தடை விதிக்கப்படுவதாக அம்மாவட்ட கலெக்டர் தர்ப்பகராஜ் தெரிவித்துள்ளார்.

# கல்குவாரி, கிரஷர் உரிமையாளர்கள் போராட்டம் வாபஸ் ஜல்லி, எம் சாண்டிற்கு ரூ.1000 உயர்வு



சென்னை, ஏப்.23

கல்குவாரி மற்றும் கிரஷர் உரிமையாளர்கள் சமீபத்தில் விதிக்கப்பட்ட சிறு கனிம நிலவரி மற்றும் ராயல்டி உயர்வு உள்ளிட்ட 24 கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 16ந்தேதி முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் இந்த சங்கத்தினருடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சென்னை தலைமை செயலகத்தில் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதில் உடன்பாடு ஏற்பட்டது. வேலை நிறுத்த போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

இதுதொடர்பாக தமிழக அரசு சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை தலைமைச் செயலகத்தில் நீர்வளத்துறை அமைச்சரை கல்குவாரி மற்றும் கிரஷர் உரிமையாளர்கள் சங்கத்தினர் தங்கள் கோரிக்கைகள் தொடர்பாக சந்தித்தனர். கல்குவாரிகளுக்கு வழங்கப்படும் உரிமங்களுக்கான கால நீட்டிப்பு மற்றும் குவாரிகள் ஒருங்கிணைப்பு தொடர்பான அரசாணைகள் வெளியிடப்பட உள்ளன,

நிலத்தடி நீர்மட்டம் வரை குவாரி செய்வது, ஓராண்டில் உச்ச உற்பத்தி செய்வது, இரண்டாவது முறையாக மாவட்ட கலெக்டரின் தடையில்லா சான்று தேவையில்லை போன்றவற்றை பரிசீலித்து முடிவு செய்திட மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உறுதி செய்துள்ளது. இதர கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று சங்கத்தினருக்கு தெரிவிக்கப்பட்டது. கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் சங்கத்தினர் அரசுக்கு நன்றி தெரிவித்தனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அமைச்சர் துரைமுருகனுடன் பேச்சுவார்த்தை முடிந்த பின்னர் சங்கத்தினர் அளித்த பேட்டியில், 'கனிம வரி உயர்வுக்கு ஏற்ப பொருட்கள் விலையை ஏற்றி கொள்ளலாம் என்று அமைச்சரும், அதிகாரிகளும் அனுமதி கொடுத்து உள்ளனர்.

எனவே இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் ஒரு யூனிட் ஜல்லி ரூ.4 ஆயிரத்தில் இருந்து ரூ.5 ஆயிரமாகவும், எம் சாண்ட் ரூ.6 ஆயிரமாகவும், பி சாண்ட் ரூ.7 ஆயிரமாகவும் விலை உயரும்' என்றார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

23.4.2025

# கிருஷ்ணகிரி: குடோனில் திடீர் தீ... பல பொருட்கள் சேதம்



கிருஷ்ணகிரி, ஏப்.23

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வெங்கடேஷ் நகரில் முனுசாமி (வயது 50) என்பவருக்கு சொந்தமான பழைய பொருட்கள் சேமிப்பு குடோன் உள்ளது. ஓசூர் பகுதியில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் சேகரிக்கப்படும் இரும்பு, அலுமினியம், பிளாஸ்டிக், காப்பர், பழைய பேப்பர்கள் உள்ளிட்ட பழைய பொருட்கள் இந்த குடோனுக்கு கொண்டு வந்து பின்னர் அதனை தரம் பிரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று திடீரென குடோனின்வெளிப்புறத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த பழைய பொருட்களில் தீப்பிடித்தது பின்னர் இந்த தீயானதுமெல்லமெல்ல குடோனின் உள்ளேயும் பரவி அங்கிருந்த பழைய பொருட்கள் தீப்பற்றி எரிந்தன. இதனால் அப்பகுதி கரும்புகை மண்டலமாக காட்சியளித்தது. இந்த தீவிபத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து தகவல் அறிந்து 2 தீயணைப்பு வாகனங்களில் வந்த ஓசூர் தீயணைப்பு படையினர் தண்ணீரை பீய்ச்சி அடித்து நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர். இந்த தீ விபத்தில் பல லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் தீயில் எரிந்து சேதம் அடைந்ததாக கூறப்படுகிறது. இந்த தீ விபத்து குறித்து ஓசூர் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# மாநகர பஸ் மாதாந்திர பயணச்சீட்டு விற்பனை 24ந்தேதி வரை நீட்டிப்பு



சென்னை, ஏப்.23

சென்னை மாநகர் போக்குவரத்துகழகமேலாண்மை இயக்குனர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் ஏப்ரல் 16ந் தேதி முதல் மே 15ந் தேதி வரையிலான செல்லதக்க, விருப்பம்போல் பயணம் செய்யக் கூடிய ரூ.1,000 மற்றும் ரூ.2 ஆயிரம் மதிப்பிலான பயண அட்டை மாதந்தோறும் 7ந்தேதி முதல் 22ந்தேதி வரையிலும், மாதாந்திர சலுகை பயண அட்டை மாதந்தோறும் 1ந் தேதி முதல் 22ந்தேதி வரையிலும் அனைத்து மாநகர் போக்குவரத்து கழக மாதாந்திர பயணச்சீட்டு விற்பனை மையங்களிலும் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த 10ந்தேதி அன்று மகாவீர் ஜெயந்தி, 14ந்தேதி அன்று தமிழ் புத்தாண்டு என தொடர் விடுமுறை காரணமாக, பயணிகள் நலன்கருதி இந்த முறை மாதாந்திர பயண அட்டை, சலுகை அட்டை விற்பனை வருகிற 24ந்தேதி அன்று வரை நீட்டிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும். எனவே, பயணிகள் இதனை பயன்படுத்தி பயன் அடையலாம்" இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# திருச்செந்தூரில் இரு தரப்பினர் இடையே மோதல்; 5 பேருக்கு அரிவாள் வெட்டு

திருச்செந்தூர், ஏப்.23

திருச்செந்தூர் கோகுல்நகரை சேர்ந்தவர் கண்ணன். இவர் சமையல் கியாஸ் ஏஜென்சி நிறுவனத்தில் சிலிண்டர் வினியோகம் செய்யும்ஊழியராகவேலை செய்து வருகிறார். இவர் நேற்று முன்தினம் சோனகன்விளை நீல்புரம் பகுதியில் கியாஸ் சிலிண்டர் வினியோகம் செய்வதற்காக லோடு ஆட்டோவில் சென்றார்.

அப்போது அந்த வழியாக நீல்புரத்தைச் சேர்ந்த ஜெபராஜ் (வயது 60) ஓட்டி வந்த பைக் எதிர்பாராதவிதமாக லோடு ஆட்டோவில் உரசியதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது ஆத்திரமடைந்த ஜெபராஜ் கண்ணனை தாக்கியதாக கூறப்படுகிறது.

இதையடுத்து நேற்று இரவில் கண்ணனுக்கு ஆதரவாக சிலர் நீல்புரத்துக்கு சென்று ஜெபராஜிடம் தட்டிகேட்டு அவரை அரிவாளால் வெட்டினர். இதில் தலையில் பலத்த காயமடைந்த ஜெபராஜ் திருச்செந்தூர் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இதனை அறிந்த ஜெபராஜின் மகன் நவீன் (வயது 32) திருச்செந்தூருக்கு சென்றார். தந்தை தாக்கப்பட்டது தொடர்பாக நவீன் தனது நண்பர்களுடன் எதிர்தரப்பினரிடம் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக திருச்செந்தூர் யூனியன் அலுவலகம் முன்பாக சென்றார். அப்போது இருதரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு ஒருவரை ஒருவர் அரிவாள், உருட்டு கட்டையால் தாக்கி கொண்டனர்.

இதில் நவீன், கந்தவேல் (21), நட்டார் ஆனந்த் (20) ஆகியோருக்கு அரிவாள் வெட்டு விழுந்தது. அங்குள்ள நடைபாதை ஓட்டலில் உணவு வாங்க வந்த தூத்துக்குடியைச் சேர்ந்த விஜயபிரகாசுக்கும் (27) அரிவாள் வெட்டு விழுந்தது.

படுகாயமடைந்தவர்கள் அரசு மற்றும் தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். இதுகுறித்து தகவல் அறிந்ததும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் நிலவியதால் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# காவலர்களுக்கு சங்கங்கள் இல்லாதது ஏன்? ஐகோர்ட்டு மதுரைக்கிளை கேள்வி



மதுரை, ஏப்.23

மதுரை ஆஸ்டின்பட்டியைச் சேர்ந்த காவலர் செந்தில்குமார் என்பவர் ஐகோர்ட்டு மதுரைக்கிளையில் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அந்த மனுவில் அவர், "தமிழ்நாட்டில் காவலர்கள் அதிக பணிச்சுமை காரணமாக பல்வேறு பிரச்சனைகளை சந்திக்கின்றனர். 2021ம் ஆண்டு காவலர்களுக்கு வார விடுமுறை வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. எனவே, அந்த அரசாணையை நடைமுறைப்படுத்த உத்தரவிட வேண்டும்" என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த மனு நீதிபதி பட்டு தேவானந்த் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, ஒரு லட்சத்து 20 ஆயிரம் காவலர்கள் இருக்கும் நிலையில், ஒருவர் மட்டும் மனு தாக்கல் செய்திருப்பது பாராட்டத்தக்கது என்று நீதிபதி கூறினார். கேரளா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் காவலர்களுக்கு சங்கம் உள்ளது. ஆனால் இங்கு மட்டும் போலீசாருக்கு இதுவரை சங்கம் இல்லாதது ஏன்? என்று நீதிபதி கேள்வி எழுப்பினார்.

மேலும், தனியார் தொண்டு நிறுவனங்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் என அனைவருக்கும் சங்கங்கள் இருக்கையில் காவல்துறையினருக்கு மட்டும் ஏன் சங்கங்கள் இல்லை?

இது ஜனநாயகத்திற்கு எதிரானது இல்லையா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். மனுதாரர் விளம்பர நோக்கத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

இதைக் கேட்ட நீதிபதி, 2021ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணை இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லையெனில் அந்த அரசாணையும் விளம்பர நோக்கத்திற்காக பிறப்பிக்கப்பட்டது எனக் கூற இயலுமா? என்று கேள்வி எழுப்பினார்.

முதல்வரின் உத்தரவுகளை அரசு அதிகாரிகள் மதிப்பதில்லையா? காவலர்களுக்கு வார விடுமுறை வழங்க வேண்டும் என்ற அரசாணையை உயர் அதிகாரிகள் ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்று கேள்வி எழுப்பிய நீதிபதி, இது தொடர்பாக தமிழக டி.ஜி.பி. பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு வழக்கின் விசாரணையை ஒத்தி வைத்தார்.

# திருச்செந்தூர்: புதிய மதுபானக்கூடம் அமைக்க எதிர்ப்பு... பொதுமக்கள் சாலை மறியல்



திருச்செந்தூர், ஏப்.23

திருச்செந்தூர் ஆறுமுகநேரியில் புதிய மதுபானக்கூடம் அமைக்க அரசு அனுமதி வழங்கியதாக கூறப்படுகிறது. இந்தநிலையில் மதுபானக்கூடம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் , அதிமுக, பாஜக, தவெக உள்ளிட்ட அனைத்து கட்சியினர், ஊர் மக்கள் மற்றும் வியாபாரிகள் என சுமார் 200க்கும் மேற்பட்டோர் திருச்செந்தூர் தூத்துக்குடி சாலையில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து தகவலறிந்த போலீசார் போராட்ட நபர்களிடம் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். இருப்பினும் போராட்டம் தொடர்ந்து நடத்தப்பட்டதால் போலீசார் திடீரென அங்கிருந்தவர்களை வலுக்கட்டாயமாக கைது செய்தனர். இதனையடுத்து அனைவரையும் வேனில் ஏற்றி தனியார் கல்யாண மண்டபத்தில் தங்க வைத்து பின்னர் விடுவிக்கப்பட்டனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# நீலகிரியில் நாளை முதல் 4 சோதனை சாவடிகளில் மட்டுமே இபாஸ் நடைமுறை மாவட்ட நிர்வாகம்



நீலகிரி, ஏப்.23

நீலகிரி மாவட்டத்தில் அமல்படுத்தப்பட்டுள்ள இபாஸ் நடைமுறை இனி 4 முக்கிய சோதனை சாவடிகளில் மட்டுமே கடைப்பிடிக்கப்படும் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது. நீலகிரியில் கல்லாறு, குஞ்சப்பனை, மசினகுடி, மேல் கூடலூர் ஆகிய சோதனை சாவடிகளில் மட்டும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது வரை நீலகிரி மாவட்ட எல்லையில் உள்ள 14 சோதனை நடைபெற்று வருகிறது. சோதனை சாவடிகளில் இபாஸ் இருந்தால் மட்டுமே வாகனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

# என் படத்தில் கிளாமர் இருக்கும்.. ஆனால் அது இருக்காது சுந்தர் சி



நீண்ட வருடங்களுக்கு பிறகு சுந்தர்.சி வடிவேலு கூட்டணியில் உருவாகி வரும் திரைப்படம் 'கேங்கர்ஸ்'. இதற்கு சத்யா. சி இசையமைக்கிறார். இதில் கதாநாயகியாக கேத்தரின் தெரசா நடிக்கின்றார். ஹரிஷ் பெரடி, மைம் கோபி, முனிஸ்காந்த், பக்ஸ் ஆகியோர் நடித்துள்ளனர்.

வடிவேலு இப்படத்தில் பல கெட்டப்புகளில் நடித்துள்ளார். இத்திரைப்படம் வருகின்ற ஏப்ரல் 24ம் தேதி அன்று திரைக்கு வருகிறது. இந்நிலையில் இந்த படத்திற்கு தணிக்கை குழு யு/ஏ சான்றிதழ் அளித்துள்ளனர். இப்படத்தின் டிரெய்லர் மற்றும் பாடல்கள் அடுத்தடுத்து வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருகின்றன.

இப்படத்தின் புரமோஷன் பணிகள் தற்பொழுது தீவிரமாக நடைப்பெற்று வருகிறது. இந்த நிலையில், சமீபத்தில் நடந்த நேர்காணல் ஒன்றில் இயக்குநர் சுந்தர் சி "என்னுடைய படத்தினை பெரும்பாலும் குழந்தைகள் மற்றும் குடும்பங்கள் தான் பார்க்கின்றனர். அதனால் தான் என்னுடைய படங்களில் இரட்டை அர்த்த வசனங்கள் இடம் பெறுவதை நான் விரும்புவது இல்லை. என்னுடைய படத்தில் கிளாமர் காட்சிகள் இருக்கும். ஆனால் ஆபாசம் இருக்காது. நான் கதை எழுதும் போதே இதை தவிர்த்துவிடுவேன்" என்று தெரிவித்துள்ளார்.


# 'கேங்கர்ஸ்' படத்தின் இரண்டாவது பாடல் வெளியீடு

சுந்தர்.சி வடிவேலு கூட்டணியில் உருவாகியுள்ள திரைப்படம் 'கேங்கர்ஸ்'. சுமார் 15 ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு மீண்டும் இந்த கூட்டணி இணைந்துள்ளதால் இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது. இந்த படத்தில் கதாநாயகியாக கேத்தரின் தெரசா நடித்துள்ளார். மேலும் ஹரிஷ் பெரடி, மைம் கோபி, முனிஸ்காந்த், பக்ஸ் ஆகியோர் நடித்துள்ளனர்.

இதில் வடிவேலு பல கெட்டப்புகளில் நடித்துள்ளார். குறிப்பாக பெண் வேடமிட்டும் நடித்துள்ளார். இப்படம் வருகிற 24ம் தேதி திரைக்கு வர உள்ள நிலையில், சமீபத்தில் டிரெய்லரை வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

அதனை தொடர்ந்து இப்படத்தின் முதல் பாடலான "குப்பன் தொல்லை தாங்கலையே' என்ற பாடல் வெளியாகி வரவேற்பை பெற்றது. தற்போது இரண்டாவது பாடலான 'என் வான்மதியே' என்ற பாடல் வெளியாகி உள்ளது. இப்பாடலை லவரதன் வரிகளில் மது ஸ்ரீ மற்றும் அஷ்வத் அஜித் இணைந்து பாடியுள்ளனர்.

# இதனால் தான் சினிமாவில் இருந்து விலகி இருந்தேன் நடிகை ரம்பா



தமிழ் சினிமாவில் 90களில் டாப் ஹீரோயினாக வலம் வந்தவர் ரம்பா. ரஜினி, விஜய் போன்ற முன்னணி நடிகர்களின் படங்களில் நடித்து ரசிகர்கள் மனதில் இடம் பிடித்தார்.

இவர்கடந்த2010ம்ஆண்டுதொழிலதிபர்இந்திரகுமார்பத்மநாதன்என்பவரை திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். சுமார் 15 ஆண்டுகளாக சினிமாவில் இருந்து விலகி இருந்த ரம்பா தற்போது விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் 'ஜோடி ஆர் யூ ரெடி' என்ற நடன நிகழ்ச்சியில் நடுவராக கலந்துகொண்டு வருகிறார்.

இதற்கிடையில் சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட ரம்பா, ஏன் இத்தனை நாட்களாக சினிமாவில் இருந்து விலகி இருந்தார் என்பதை விளக்கியுள்ளார். அதாவது, "எனக்கு திருமணமாகி குழந்தைகள் பிறந்த போது, என் குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட வயது வரும் வரை குறைந்தபட்சம் ஒரு பெற்றோராவது அவர்களுடன் இருக்கவேண்டும் என்று நினைத்தேன். இதனால் தான் நான் சினிமாவில் இருந்து சில ஆண்டுகள் விலகி குழந்தைகளுடன் இருந்தேன். ஆனால் நடிப்பில் எனக்கு இருந்த ஆர்வம் கொஞ்சம் கூட குறையவில்லை. மேலும் என்னுடைய முதல் காதல் எப்போதுமே சினிமாதான்" என்று கூறியுள்ளார்.

# 'சச்சின்' படத்தின் வசூல் விவரம்.. ரீரிலீஸில் இத்தனை கோடியா?

தமிழில் வெளியாகி வெற்றி பெற்ற முன்னணி நடிகர்களின் படங்களை டிஜிட்டலில் புதுப்பித்து மீண்டும் ரீரிலீஸ் செய்துவருகிறார்கள். அந்தவகையில்கடந்த2005ம்ஆண்டுவிஜய், ஜெனிலியாநடிப்பில்வெளியான'சச்சின்'திரைப்படம் கடந்த 18ந் தேதி ரீரிலீஸ் செய்யப்பட்டது.

'சச்சின்' திரைப்படம் வெளியாகி 20 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி ரீரிலீஸான நிலையில், இத்திரைப்படத்தை விஜய்ரசிகர்கள்திரையரங்குகளில்கொண்டாடி வருகின்றனர். இந்தநிலையில்சச்சின்திரைப்படம் 3நாட்களில்செய்துள்ள வசூல் குறித்த விவரம் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் உலகளவில் ரூ. 5 கோடி வசூல் செய்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

# 31 ரன்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வீழ்த்தியது குஜராத்

ஐ.பி.எல். தொடரில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் விளையாடிது . ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டிக்கான டாஸ் வென்ற கொல்கத்தா கேப்டன் ரகானே பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலிங் பேட்டிங் செய்த குஜராத் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக சுப்மன் கில் சாய் சுதர்சன் களமிறங்கினர். அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இருவரும் அரைசதம் கடந்து அசத்தினர். முதல் விக்கெட்டுக்கு 12.2 ஓவர்களில் 114 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. சாய் சுதர்சன் 52 ரன்களில் (36 பந்துகள்) ஆட்டமிழந்தார்.அடுத்து வந்த பட்லர் ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடினார். மறுமுனையில் சதத்தை நோக்கி வெகுவாக முன்னேறிய கில் 90 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த திவேட்டியா டக் அவுட் ஆகி ஏமாற்றினார்.

இறுதி கட்டத்தில் பட்லர் (41 ரன்கள்) தனி ஆளாக போராடி அணி வலுவான நிலையை எட்ட உதவினார். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் குஜராத் 3 விக்கெட்டுகளை இழந்து 198 ரன்கள் அடித்துள்ளது. கொல்கத்தா தரப்பில் வைபவ் அரோரா, ஹர்ஷித் ராணா மற்றும் ரசல் தலா ஒரு விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 199 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற வலுவான இலக்கை நோக்கி களமிறங்கிய கொல்கத்தா அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 159 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதனால் குஜராத் அணி 39 ரன்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வீழ்த்தியது.

# சாய், கில் அரைசதம்.. கொல்கத்தா அணிக்கு வலுவான இலக்கு நிர்ணயித்த குஜராத்



ஐ.பி.எல். தொடரில் இன்று நடைபெற்று வரும் ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் விளையாடி வருகின்றன. ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த போட்டிக்கான டாஸ் வென்ற கொல்கத்தா கேப்டன் ரகானே பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலிங் பேட்டிங் செய்த குஜராத் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக சுப்மன் கில் சாய் சுதர்சன் களமிறங்கினர். அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இருவரும் அரைசதம் கடந்து அசத்தினர். முதல் விக்கெட்டுக்கு 12.2 ஓவர்களில் 114 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. சாய் சுதர்சன் 52 ரன்களில் (36 பந்துகள்) ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த பட்லர் ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடினார். மறுமுனையில் சதத்தை நோக்கி வெகுவாக முன்னேறிய கில் 90 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த திவேட்டியா டக் அவுட் ஆகி ஏமாற்றினார். இறுதி கட்டத்தில் பட்லர் (41 ரன்கள்) தனி ஆளாகபோராடிஅணிவலுவானநிலையைஎட்டஉதவினார். நிர்ணயிக்கப்பட்ட20ஓவர்களில்குஜராத்3விக்கெட்டுகளை இழந்து 198 ரன்கள் அடித்துள்ளது. கொல்கத்தா தரப்பில் வைபவ் அரோரா, ஹர்ஷித் ராணா மற்றும் ரசல் தலா ஒரு விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 199 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற வலுவான இலக்கை நோக்கி கொல்கத்தா களமிறங்க உள்ளது.

# சென்னை அணியின் தோல்விக்கு காரணம் இதுதான் இந்திய முன்னாள் வீரர்

10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதில் நேற்று மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் நடைபெற்ற 38வது லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த சென்னை 20 ஓவரில் 5 விக்கெட்டை இழந்து 176 ரன்கள் எடுத்தது. சென்னை தரப்பில் அதிகபட்சமாக ரவீந்திர ஜடேஜா 53 ரன்கள் எடுத்தார்.

தொடர்ந்து 177 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த மும்பை 15.4 ஓவரில் 1 விக்கெட்டை மட்டும் இழந்து 177 ரன்கள் எடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. மும்பை தரப்பில் அதிகபட்சமாக ரோகித் சர்மா 76 ரன்னும், சூர்யகுமார் யாதவ் 68 ரன்னும் எடுத்தனர்.

சென்னை அணிக்கு 6வது தோல்வியாகும். புள்ளிபட்டியலில் கடைசி இடத்தில் உள்ள சென்னை அணி (4 புள்ளி) எஞ்சிய 6 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றால் மட்டுமே பிளேஆப் சுற்றுக்கு தகுதி பெற முடியும். ஒன்றில் தோற்றாலும் ஏறக்குறைய வெளியேற வேண்டியதுதான். இந்த இக்கட்டான சூழலில் சென்னை அணி அடுத்த ஆட்டத்தில் வருகிற 25ந்தேதி சன்ரைசர்சுடன் மோதுகிறது. இந்நிலையில் திறமையான இளம் வீரர்களை கண்டறிந்து தங்களுடைய அணியை கட்டமைக்காததே சிஎஸ்கேவின் தோல்விக்கு முக்கிய காரணம் என்று இந்திய முன்னாள் வீரர் ஹர்பஜன் சிங் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "சென்னை சூப்பர் கிங்ஸ் மிகவும் பெரிய அணி. இளம் வீரர்களை தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பு அவர்களுக்கு ஏலத்தில் இருந்தது. இப்போது அவர்களிடம் உள்ள இளம் வீரர்களும் போட்டியை மாற்றுபவர்களாக அசத்தவில்லை. இது தோல்விக்கு முக்கிய காரணம். இதற்கு திறமையான வீரர்களை கண்டறியும் சிஎஸ்கே அணியின் நிர்வாகம் பற்றி கேள்விகேட்கப்படவேண்டும். ஏனெனில்அவர்களுடைய தேர்வு அப்படி அமைந்துள்ளது" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.